"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

"எப்பொருள் யார் யார் வாயக் கேட்பினும்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

14/5/79

இந்துமதமே வாழ்க! பஞ்சாங்கமே வாழ்க!

சோதிடபரிபாலினி

சித்தார்த்தி

வைகாசி

இதழ்

15-5-79.

உள்ளே.....

சித்தார்த்தி வரு வைகாசி மீ ராசிபலன்
விசேஷ தினங்கள்
சுபதினங்கள்
சோதிடம் (வானசாஸ்திரப்பகுதி)
தேங்காய்ச் சகுனம்
வைகாசி மாத பலன் இலங்கைக்கு
கோசரபலன்
நவக்கிரக சாந்தி
காலஹோராசக்கரம் (ஆண் பெண் அறியும் முறை)
தாயினும் நல்லன் தாழ் சடையோன்
சக்தி வழிபாட்டு நூல்கள்
துவிகளத்திர யோகங்கள்
அருளும் பொருளும்
தீபமும் தீபவிளக்கமும்

விலை ரூபா 1-00

ஆசிரியர்
இ.வெங்கடேச ஐயர்

சோதிடபரிபாலன மடம்
கொக்குவில்

உ

சிவமயம்

"ஓதி டத்திட முள்ளவ ருய்யுமா
ருதி வேதத்தி னங்கமொ ராறனுட்
சோதி டப்பரி பாலினி சொல்லுவான்
மாதிடத்தன் மலரடி போற்றுவாம்".

சோதிட பரிபாலினி

மலர் 1	சித்தார்த்திவருஷம் வைகாசிமாதம்	இதழ் 12

சித்தார்த்திவருடம் வைகாசிமாதக் கிரகசாரம் 1உமுதல் 31உ வரை

	சூரி	
கேது	சித்தார்த்தி வருஷ வைகாசிமீ 1உ — 31உ கிரகநிலை	குரு
		சனி ராகு

வைகாசி 2-ந் திகதி 58 நாடி 04 விநாடி (பி. இ. 5-07)-ல் இட புதன்.

வைகாசி 19 ந் திகதி 6 நாடி 47 விநாடி (மு.ப. 8-35)-ல் மிதுனபுதன்

வைகாசி 19-ந் திகதி 38 நாடி 00 விநாடி (மு.ப. 9-04)-ல் புதன் மேற்கே உதயம்.

வைகாசி 23 ந் திகதி 58 நாடி 00 விநாடி (பி.இ. 5-04-)ல் இட சுக்கிரன்.

சந்திரன்: இம்மாதம் முழுவதும் தனு இராசிமுதல் மகர இராசிவரையும் சஞ்சரிப்பார்.

செவ்வாய்: காலை வெள்ளியாகக் கிழக்கே தோற்றிவருவார்.

புதன்: 19-ம் திகதியின்மேல் மாலை வெள்ளியாக மேற்கே தோற்றிவருவார்,

குரு: கிழக்கே தோற்றிவருவார்.

சுக்கிரன்: காலைவெள்ளியாகக் கிழக்கே தோற்றிவருவார்.

சனி: கிழக்கே தோற்றிவருவார்.

தன்னுடைய நிழலைப்பார்த்துச் சுபாசுபம் அறியும்வகை

சற்குருமுகமாக அறிந்து நிலவு அல்லது வெய்யிலில் தன்னுடைய நிழலைப் பார்த்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தால் அப்பொழுது ஆகாயத்தில் தன்னுடைய உருவம்போல் ஒரு உருவம் தோன்றினால் அவ்வுருவம் பொன்னிறமாயின் சம்பத்தையும், வெண்மையான நிறமாயின் தீர்க்காயுளையும், சிவப்புநிறமாயின் கலகத்தையும். கருமையான நிறமாயின் நோயையும், கைகால் தெரியாதிருந்தால் மரணத்தையும் ஒரு அயனத்துள் தரும். வெறுக்கத்தக்க தோற்றமாயின் மூன்று மாதத்திற்குள் தரும்.

சித்தார்த்தி வருடம் வைகாசி மாதம் விசேட தினங்கள்

வைகாசி	8	செவ்வாய் — ஏகாதசி விரதம் :	இது விஷ்ணுவுக்குரிய விரதமாகும்.
,,	9	புதன் — பிரதோஷ விரதம் :	இது சிவனுக்குரிய விரதமாகும்.
,,	11	வெள்ளி — அமாவாசைவிரதம் :	இது பிதுர்தர்ப்பணம் செய்வதற்குரிய தினமாகும்.
,,	11	,, — கார்த்திகை விரதம் :	இது சுப்பிரமணியருக்குரிய விரதமாகும்.
,,	13	ஞாயிறு — கதிஜெயந்தி.	
,,	14	திங்கள் — அக்கினிநாள் முடிபு.	
,,	15	செவ்வாய் — சதுர்த்திவிரதம் :	இது விநாயகருக்குரிய விரதமாகும்.
,,	17	வியாழன் — ஷஷ்டிவிரதம் :	இது சுப்பிரமணியருக்குரிய விரதமாகும்.
,,	23	புதன் — ஏகாதசிவிரதம் :	இது விஷ்ணுவுக்குரிய விரதமாகும்.
,,	24	வியாழன் — கூர்மஜயந்தி	
,,	25	வெள்ளி — பிரதோஷவிரதம் :	இது சிவனுக்குரிய விரதமாகும்.
,,	25	,, — வைகாசி விசாகம் :	இது சுப்பிரமணிய நக்குரிய தினமாகும்.
,,	27	ஞாயிறு — பூரணைவிரதம் :	இது பிதுர்தர்ப்பணம் செய்வதற்குரிய தினமாகும்.

சித்தார்த்திவருட வைகாசிமாத சுபமுகூர்த்தங்கள்

திருமங்கலியத்துக்குப் பொன்னுருக்கல், விவாகப்பதிவு செய்தல்

வைகாசி 21 திங்கள் பின்னிரவு 1 மணி 03 நிமிடமுதல் — 2 மணி 33 நிமிடம்வரை
,, 24 வியாழன் காலை 6 மணி 31 நிமிடமுதல் — 7 மணி 11 நிமிடம்வரை

விவாகம்

வைகாசி 8 புதன் பின்னிரவு 2 மணி 18 நிமிடமுதல் — 3 மணி 49 நிமிடம்வரை இலக்கினம் : மீனம்.

,, 12 சனி இரவு 11 மணி 54 நிமிடமுதல் — 1 மணி 27 நிமிடம்வரை. இலக்கினம் : கும்பம்.

,, 12 சனி பின்னிரவு 1 மணி 39 நிமிடமுதல் — 3 மணி 09 நிமிடம்வரை. இலக்கினம் : மீனம்.

,, 13 ஞாயிறு காலை 5 மணி 52 நிமிடமுதல் — 7 மணி 02 நிமிடம்வரை. இலக்கினம் : இடபம்.

,, ,, ,, பகல் 7 மணி 16 நிமிடமுதல் — 9 மணி 13 நிமிடம்வரை. இலக்கினம் : மிதுனம்.

,, ,, ,, இரவு 11 மணி 48 நிமிடமுதல் — 1 மணி 19 நிமிடம்வரை, இலக்கினம் : கும்பம்.

,, ,, ,, இரவு 1 மணி 31 நிமிடமுதல் — 3 மணி 01 நிமிடம்வரை. இலக்கினம் : மீனம்.

,, 14 திங்கள் காலை 5 மணி 58 நிமிடமுதல் — 6 மணி 13 நிமிடம்வரை. இலக்கினம் : இடபம்.

,, 19 சனி காலை 5 மணி 52 நிமிடமுதல் — 6 மணி 38 நிமிடம்வரை: இலக்கினம் : இடபம்.

,, ,, ,, பகல் 6 மணி 50 நிமிடமுதல் — 8 மணி 45 நிமிடம் வரை: இலக்கினம் : மிதுனம்.

வைகாசி 21 திங்கள் இரவு 1 மணி 03 நிமிடமுதல் — 2 மணி 33 நிமிடம்வரை. இலக்கினம்: மீனம்.

,, ,, ,, இரவு 4 மணி 31 நிமிடமுதல் — 5 மணி 52 நிமிடம்வரை. இலக்கினம்: இடபம்.

,, 23 புதன் 4 மணி 24 நிமிடமுதல் — 5 மணி 52 நிமிடம்வரை. இலக்கினம்: இடபம்.

,, 24 வியாழன் காலை 5 மணி 52 நிமிடமுதல் — 6 மணி 19 நிமிடம்வரை. இலக்கினம்: இடபம்.

,, ,, ,, காலை 6 மணி 31 நிமிடமுதல் — 7 மணி 11 நிமிடம்வரை. இலக்கினம்; மிதுனம்.

,, 28 திங்கள் காலை 6 மணி 15 நிமிடமுதல் — 7 மணி 18 நிமிடம்வரை. இலக்கினம்: மிதுனம்.

,, ,, ,, இரவு 10 மணி 51 நிமிடமுதல் — 11 மணி 32 நிமிடம்வரை. இலக்கினம்: கும்பம்.

வீடுகட்டுதல் — குடிபுகுதல்

வைகாசி 19 சனி பகல் 6 மணி 50 நிமிடமுதல் — 8 மணி 45 நிமிடம்வரை. இலக்கினம்: மிதுனம்; திக்கு: வடதெற்கு. விபரம்: கட்ட, புக.

,, 21 திங்கள் இரவு 1 மணி 03 நிமிடமுதல் — 2 மணி 33 நிமிடம்வரை. இலக்கினம்: மீனம். திக்கு: வடதெற்கு. விபரம்: கட்ட, புக.

,, 24 வியாழன் பகல் 6 மணி 31 நிமிடமுதல் — 7 மணி 11 நிமிடம்வரை. இலக்கினம்: மிதுனம். திக்கு: வடதெற்கு. விபரம்: கட்ட, புக.

தேவப்பிரதிஷ்டை

வைகாசி 23 புதன் காலை 5 மணி 52 நிமிடமுதல் — 6 மணி 23 நிமிடம்வரை. இலக்கினம்: இடபம், விபரம்: சம்புரோக்ஷணை,

,, 24 வியாழன் காலை 5 மணி 52 நிமிடமுதல் 6 மணி 19 நிமிடம்வரை. இலக்கினம்: இடபம். விபரம்: சம்புரோக்ஷணை.

,, ,, ,, பகல் 6 மணி 31 நிமிடமுதல் — 7 மணி 11 நிமிடம்வரை. இலக்கினம்: மிதுனம். விபரம்: சம்புரோக்ஷணை — பிரதிஷ்டை.

,, 28 திங்கள் காலை 6 மணி 15 நிமிடமுதல் — 7 மணி 18 நிமிடம்வரை. இலக்கினம்: மிதுனம்.

சோதிடம்

ஜ்யோதிஷ் என்பது ஒளி. இது ஒளியுடையனவாய் வானத்தே விளங்கும் கிரக நக்ஷத்திராதிகளைக் குறிக்கும். இவைகளின் சஞ்சாரத்தையும், அதனால் இப்பூமியின்கண் வாழும் உயிர்களுக்கு நேரிடும் இன்பதுன்பங்களையும், இவற்றுள் துன்பங்களைத் தவிர்த்து இன்பங்களைப் பெருக்குதற்கேற்ற பிராயச்சித்தங்களையும் விளக்குவது 'ஜ்யௌதிஷம்' என்று கூறப்பட்டது. இது தமிழில் சோதிடமென வழங்கப்படும்.

சோதிடம்: 1.

வானசாஸ்திரப் பகுதி

தான் கடக்கமுடியாத ஒரு ஆற்றினகலத்தை ஒரு நிலஅளவைகாரன் எவ்விதம் அளந்தறிகின்றானே, அவ்வண்ணமே வானசோதிகளின் தூரங்களும் கணித்தறியப்படுகின்றன. எமது சூரியனையும் அதனைச் சுற்றிச் செல்லும் கிரகாதிகளையுமில்லாது ஏனைய வானசோதிகளின் தூரத்தைக் குறிப்பிடும் எண்கள் நம்மனதில் நன்கு பதியமாட்டா. ஏனெனில், எமக்கு அதிக சமீபத்திலுள்ள நக்ஷத்திரமே 25 இலட்சகோடி மைலுக்கு அப்பால் இருக்கின்றது. அதிக தூரத்திலுள்ள நக்ஷத்திரங்களோவெனில் ஒரு செக்கனுக்கு 186300 மைல்தூரம் விரைந்துசெல்லும் ஒளியானது அவற்றிலிருந்து பூமியைச் சேர்வதற்குப் பல்லாயிரக்கணக்கான வருடங்கள் செல்லத்தக்க தூரத்திலிருக்கின்றன.

இவற்றின் தூரங்கள் இவ்வளவினவாயினும் வானசாஸ்திரிகள் கையாளும் முறைகள் மிக நுட்பமுடையனவாக இருக்கின்றன. சமீபத்திலுள்ள வானசோதிகளின் தூரங்கள், அளவைகள், நிறைகள், சலனங்கள் யாவும் நன்கு அறியப்பட்டிருக்கின்றன. இவற்றின் ஸ்தானங்களை நாம் பலவருடங்களின் முன்னரே கணித்துச் சொல்லத்தக்கதாயிருக்கின்றது. அங்ஙனம் கணித்துச் சொல்வதற்கும் பிரத்தியக்ஷத்தில் அவை தோற்றுவதற்கும் இருக்கும் அற்பவித்தியாசங்களை ஆராய்ந்தால் இன்னும் நுட்பமான விபரங்கள் புலப்படும்.

இப்பொழுது வானசாஸ்திரத்தின் பிரயோசனத்தை நாம் காண்கிறோம். வானசோதிகளின் அமைப்பையும் சலனத்தின் குணகுணங்களையும் விளக்குவதாகிய இயற்கை வானசாஸ்திரமானது, வானசோதிகளின் சலனங்கள் மனிதருக்கு எவ்வாறு உபயோகமாகுமென்பதை விளக்குவதற்கிய அப்பியாச வானசாஸ்திரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது.

வானசாஸ்திரமானது கப்பலோட்டிகளுக்கும் பிரயாணிகளுக்கும் எவ்வாறு உபயோகமாகின்றதென்பதை முதலில் ஆராய்வோம். பூமியைச் சுற்றி அநேக ஆயிரம் மைல் தூரத்துக்குக் கரைகாணுதை சமுத்திரங்களுக்கூடாகச் செல்லும் கப்பல்கள் ''நாட்டிக்கல் அல்மனக்'' என்னும் புஸ்தகத்தில் ஒரு பிரதிகொண்டே செல்கின்றன. இதில் சூரியன், சந்திரன் கிரகங்கள் நக்ஷத்திரங்கள் முதலியனவற்றின் இருப்பிடங்கள் ஒவ்வொரு தினத்துக்கும் ஒரு குறித்த காலத்துக்குக் குறிக்கப்பட்டிருக்கும். இதன் துணையைக்கொண்டு கப்பலோட்டிகளும் பிரயாணிகளும் தங்கள் இருப்பிடத்தையும் செல்லும் மார்க்கத்தையும் அப்போதைக்கப்போது அறிந்துகொள்கிறார்கள்.

ஆயினும், நாம் கப்பலோட்டிகளிடத்துக்கும் அந்நியதேசங்களுக்

குஞ் செல்லாமலே வானசாஸ்திரத்தின் உபயோகங்களை அறிந்துகொள்ளலாம். காலத்தை அளப்பதற்கும், நாள் வருடம் முதலானவற்றை நிர்ணயம் செய்வதற்கும் வானசாஸ்திரம்வேண்டியதாயிருக்கின்றது. வானசாஸ்திரவுணர்ச்சியின்றி மணிக்கூடு முதலான காலவளவைக் காட்டும் யந்திரங்களை உண்டாக்குவதும் அவைகளைச் சரியாக உபயோகிப்பதும் முடியாது. வருஷத்தை இருதுக்களாகப் பகுப்பதும் சூரிய சந்திரரின் உதயாஸ்தமனங்களைக் கணிப்பதும் வானசாஸ்திரத்தைக் கொண்டேயாம். நாம் வசிக்கும் இப்பூமியின் உற்பத்தியைப்பற்றி அறிய வேண்டின் அதற்கும் வானசாஸ்திரமே ஆதாரமாயிருக்கின்றது.

வானசாஸ்திரம் மேற்காட்டிய பிரயோசனங்களைக் கொடுப்பதுடனில்லாது, எல்லோருக்கும் வேண்டியதான சோதிடசாஸ்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றது. "வானசாஸ்திரம்" என்னும் பதம் வானம்+சாஸ்திரம் என்னும் இரு பதங்களாலாயது. அதாவது வானத்து (ஆகாய வெளியினு)ள்ள சூரிய சந்திர கிரக நக்ஷத்திராதிகள் முதலான பொருட்களின் சலனங்களையும் குணகுணங்களையும் விளக்கும் நூலாம்.

❁

தேங்காய்ச் சகுனம்

தேங்காய்: இது தேவரீக்கு நிவேதிக்கும் பொருள்களுள் விசேஷமானது. தேங்காயை ராசிகளினின்று சுத்தமானதாகப் பார்த்து, அதில் பால்யம் விருத்தம் என்கிற மிக இளசும் அதிக முற்றலும் நீக்கி, பௌவனம் என்கிற நடுத்தரமானதைக் கொள்ளவேண்டும்.

கொள்ளுமிடத்துத் துர்க்கந்தமானதையும், கோணலுள்ளதையும் அதிநீளமானதையும் பின்னமானதையும் மழுமழுப்பில்லாததையும் கண்ணில்லாததையும் அதிதூலமானதையும் அதிசூக்ஷ்மமானதையும் குடுமியில்லாததையும் அழுகினதையும் நீர்வற்றினதையும் மற்றுமுள்ள குற்றமுள்ளவைகளையும் நீக்கித் தேங்காயைக் கனிஷ்டாங்குலமுள்ள சிகையுள்ளதாய்க்கொண்டு அதன் சிகையுடன் முகத்தின்பக்கமாய்த் தேங்காயைப் பிடித்துக்கொண்டு அருகில் இருக்கிற கல்லின்மேல் காயைச் சாணளவு உயரத்தூக்கி மந்திரஞ்செபித்து ஒரே அடியில் இரண்டு பாகமாகும்படி உடைக்க வேண்டும்.

அப்படி உடையின், அக்காரியம் சுபத்தைத் தருவதும் தனதானிய விருத்தியைத் தருவதுமாம். முகத்தின் பாகத்தில் முக்காற் பங்கும் அடிப்பாகத்திற் காற்பங்குமாகவும் அல்லது அடிப்புறம் முக்கால் பாகமாகவும், மேற்புறம் காற்பாகமாகவும் உடையின் புருஷரீகள் ஸ்திரீகளாகிய இருவருக்கும் அன்னியோன்னிய கலகம் விளையும்,

தேங்காய் பொடிப்பொடியாய் உடையின் தான்கொண்ட காரியம் நாசமாம். கண்ணின்புறமாக உடையின் யஜமானன் கெடுவன், முதன்மையான கண்ணின் நரம்பில் உடையின் ஆசாரியன் கெடுவன். தென்புறமாயுள்ள கண்ணின் நரம்பில் உடையின் கிராமமும் தன்னிருக்கையும் கெடும். வடபுறத்தின் கண்ணையடுத்த நரம்பில் உடையின் தன் ஊரை ஆளும் அரசனுக்கு ஆபத்துவரும், அல்லது அரசன் வேறுவன். தேங்காயின் முகமுடைந்தால் க்ஷோபமுண்டாம் நீண்டு உடையின் பயமுண்டாம். தேங்காய் உடைக்கத் தொடங்குகையில் கைவிட்டு நழுவி அப்பால் வீழின் கர்ப்பத்தில் உள்ள கருச்சிசுதயும்,

கோசர பலன் :

சித்தார்த்திவருடம் வைகாசிமாதம்

இலங்கைக்குப் பலன்

இம்மாதம் கூடு அதிகமாயிருக்கும். மாத ஆரம்பத்தில் சிறு மழை தூற்றல் உண்டு மாதப்பிற்பகுதியில் கடுங்காற்று சாட்டுத் தீ உண்டாகும். வாழைப்பழம், பாக்குப்பழம், வத்தகை, வெள்ளரி, உலாப்பழம் விலையிலியும்; கள் மதுசாரம், திராட்சரசம், மலியும். உழுந்து மலியும். எள், புகையிலை, கருவாடு, புளி, தேங்காய், இருப்பு விலையேறும் எரிபொருள், மருந்துவகை விறகு, கேழ்வரகு, சோளம், விலையேறும். காட்டு விலங்குகள் நீரின்மையால் கஷ்டமுறும். எருமை, மரின், ஆடு, பசு வருத்தமுறும். மீன் விலைமலியும். மாதஆரம்பத்தில் பெருங் கொண்டாட்டங்கள் சம்பந்தமான அரசியற் குழப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டு நண்பும், பொருளாதார உதவியும், மேலும் கிடைக்கும். மத்தியகிழக்கு நாடொன்றினால் இலங்கைக்கு அதிகநிதியுதவி கிடைக்கும். ஆசிரியர்மார் பொறியியலாளர், சட்டத்தரணிமார் விசேடசலுகை பெறுவர். வேலையாட்கள், நகர்பாதுகாவலர்கள், அரச உத்தியோகத்தர் கஷ்டமுறுவர். சங்கீத காரர், வாத்தியகாரர், கள்ளிறக்குவோர், கமக்காரர், புடவைவியாபாரிகள் விசேடலாபம் பெறுவர். ஏற்றுமதிப்பொருளிலும் இறக்குமதிப்பொருளின் பெறுமதிஅதிகரிக்கும்.

பன்னிரு இராசிகளும் அவற்றின் பலன்களும்

மேடம்

அச்சுவினி பரணி கார்த்திகை 1-ம் கால்

எதிர்காலத்தில் என்ன நிகழுமோ என்ற பயம், இடையறுதயோசனை தானிருந்த நிலையிருந்து சிறிது இறங்குதல் தன்னுடைய செல்வாக்கு உரிய இடங்களில் செல்லாமைகண்டு மனவருத்தம், பலச்சேதம், கலகம், பணவரவு, பொருள்லாபம், இனசனங்களினால் சில தொந்தரவுகள் உண்டாதல், கணவனுனல் மனைவிக்கும் மனைவியாலல் கணவனுக்கும் நற்சுகம், காரியலாபம், உல்லாசமான பொழுதுபோக்கு விருந்துகளிற் பங்குபற்றுதல், சுற்றுலாச்செல்லுதல், நிகழ்ந்த எதிர்பாராத ஒரு சம்பவத்துக்காக மனம்வருந்துதல், உண்டாம். மாணவர்களாயின் இம்மாதம் அவர்களுக்கு உற்சாகமும், முயற்சியும் உண்டாம்: 6ம் 15ம் 31ம் தேதிகள் இவர்களுக்குச் சிறந்த நாள்களாகும். இத்தேதிகள், புதுவியாபாரம், அரசாங்கநேர்முகத்தேர்வுகள் நண்பர்களைச் சந்தித்தல், விவாகப்பேச்சுக்கள், செய்யவிசேடமனுண்டாம். 16ம் தேதி இவர்களுக்கு நல்லதல்ல, பிரதானவிடயங்களை விலக்கவும்; பிரதானமாகப் பிரயாணம்மேற் கொள்ளாதிருக்கவும்.

இடபம்

கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள்
ரோகினி மிருகசிரிடம் 1, 2-ம் கால்கள்

எடுத்தகாரியங்கள் வெற்றி, மேலதிகாரிகளின் நன்மதிப்பும் பாராட்டும், இடையிடையே அற்பநோய், அதனுற்செலவு வீட்டில் நல்ல மங்கலகரமான வாழ்வு, சந்தித்த நண்பர்களால் விசேடலாபம், பொருளாதாராவிருத்தி 19ம் தேதிக்கு மேல் வந்த சுகவீனங்கள் மாறுதல், எதிர்பாரத பணவரவு, வியாபாரத்தில் நல்ல லாபம், தொழிலில் முன்னேற்றம், கடன்பெற்றவர்களிடமிருந்து தொல்லை பெண்ணுனல் கணவனுக்கும் ஆணுனல் மனைவிக்கும் விசேடபலன், அதிர்ஷ்டம், வீண்பயம், எதிர்கா

லத்தில் என்னநிகழுமோ என பய உண்டாம். இவர்களுக்கும் 7ம் 16ம் தேதிகள் விசேடபலனுக்குரிய காலங்களாகும். இந்நாட்களில் பிரயாணம், கொடுக்கல் வாங்கல், பந்துக்கள் கொண்டாட்டம், நேர்முகத்தேர்வு காதல் விவகாரங்கள் வழக்கு சம்பந்தமான ஆயத்தங்கள் செய்ய நற்பலன் உண்டாம். 27ம் தேதியை பல கருமங்களுக்கும் விலக்கவும்.

மிதுனம்

மிருகசிரிடம் 3, 4ம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் கால்கள்

இடையிடையே அற்பசுகவீனம், இனசனங்களிடையே வாக்குவாதத்தாற் கலகம், அதனால் விரோதம், பணவரவு அதிகரித்தல் வியாபாரத்தில் அதிகலாபம், தொழிற் சித்தி, வெற்றி, பெரியோர்களைச் சந்திக்கச் செல்லுதல், அதனால் காரியங்கள் அனுகூலமடைதல் 19-ம் தேதியின்மேல் பீடித்த சில அற்பநோயும் குணமாதல் நண்பரிகளாற் கஷ்டங்கள் ஏற்படுதல், இடமாற்றம் அதனால் அலைச்சலிவு, துயரம், புதிய பொறுப்புக்கள் வருதல், அதனால் அதிகாரமும் உயருதல் சந்தோஷம் உண்டாம். 2-ம் 8-ம் 17-ம் தேதிகள் இவர்களுக்குச் சுபபலனுக்குரிய நாள்களாகும். இத்தேதிகளில் பிரயாணம், நேர்முகத்தேர்வு, பெரியாரைச் சந்தித்தல், விவாகஆரம்பப்பேச்சுக்கள், காதலரைச் சந்தித்தல், வீடுகட்ட ஆரம்பம் செய்ய விசேடபலனுண்டாகும் 28ம் தேதி இவர்களுக்கு நற்பலனுக்குரிய நாளல்ல. அன்று. பிரயாணத்தையும், காதல் விவகாரங்களையும் முற்றாகவிலக்கவும்.

கடகம்

புனர்பூசம் 4ம் கால், பூசம், ஆயிலியம்

இடையிடையே மனப்பயம், காய்ச்சல் வாயுபீடை, குடும்பத்திலே வாக்குவாதத்தினால் சிறிய சச்சரவுகள் உண்டாதல், அதனால் இனசனங்களுடன் விரோதம், பிரயாணங்களில் வெகுகஷ்டம், எதிர்பாராத சில சம்பவங்கள் நிகழுதல், இன்பமான கேளிக்கைகளில் காலத்தைக்கழித்தல், இனிமையான பொழுதுபோக்கு, நல்லோர்சகாயம்; தூரஇனத்தவர் ஒருவரால் பொருள் வரவு 19ம் தேதியின் மேல் நோய்கள் குணமாதல் சச்சரவடைந்த இனசனத்தவரோடு மீண்டும் சேருதல், இலட்சுமிகரம், இல்லச்சிறப்பு உண்டாம். 10, 13, 22ம் நாள்கள் இவர்களுக்கு விசேடபலனுக்குரிய காலமாகும். இந்நாள்களில் பெரியோரைச் சந்தித்தல், புதியவியாபாரம் செய்தல், தேர்வுகளுக்குத் தோற்றுதல், வழக்குசம்பந்தவிடயங்களை ஆரம்பித்தல், கொடுக்கல் வாங்கல் செய்தல் விசேடபலனைக்கொடுக்கும். 6ம் தேதியைப் பிரதானவிடயங்களுக்கு விலக்கிக்கொள்க.

சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

எடுத்தகாரியங்கள் யாவும் அனுகூலமாதல், பெரியோர் சகாயத்தால் தடைகள் நீங்குதல் வியாபாரத்தில் பணவரவு, இலாபம் அதிகம் கிடைத்தல், தன்னுடைய அதிகாரத்தில் சிலவற்றைக் குறைத்தல், வாக்குக்கலகம், அதனால் மனஸ்தாபம், பேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுதல் தான் செய்யாத சில காரியங்களுக்காக வீண்பழி கேட்டல், அசதூறு, இடையிடையே அற்பசுகவீனம், 19ம் தேதியின் பின் அச்சுகவீனங்கள் நிவர்த்தியாதல், இழந்த சில சௌகரியங்களை மீண்டும் பெறுதல், பொருள்வரவு, நல்லோரிடம் நற்பெயர்வாங்குதல் இடையூறுதோசனை, முகவிலாசம், செல்வாக்கிடங்களில் சிறப்பு, காரியதாமதம் உண்டாம். 12ம் 21ம் தேதிகள் இவர்களுக்கு விசேடபலனைக் கொடுக்கக்கூடிய நாள்களாகும். இந்நாள்களில் விவாகம், பிரயாணம், வியாச்சியம், அரசாங்கஉத்தியோகத்தர்களைச் சந்தித்தல் என்பனவற்றைச் செய்ய விசேடபலனுண்டாகும். இவர்களுக்கு 8-ம் தேதி நற்பலனுக்குரியதல்ல. இந்நாளை பிரதானமாக காதல் விவாகம், கொடுக்கல் வாங்கல் என்பனவற்றிற்கு விலக்கிக்கொள்க.

கன்னி

உத்தரம் 2, 3, 4ம் கால்கள், அத்தம், சித்திரை 1, 2-ம் கால்கள்

எதிர்காலத்தில் என்ன நிகழுமோ என்ற பயம், இலட்சுமிகரம், சுகம், பொருள்வரவு' எடுத்தகாரியங்கள் இலகுவில் நிறைவேறுதல், தூரதேசத்திலிருந்து வந்த தண்ப ரொருவராற்சுகம், அந்நிய தேசப்பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்தல், தான்செய்யாத சில விடயங்களுக்காக வீண்பழிகேட்டல், அபகீர்த்தி, பொருட்செலவு, கடன் தொல்லை, அதனால் நண்பர்களோடு மனஸ்தாபம், காய்ச்சல், முன்னர் கிடைக்காத சில அதிகாரங்கள் கிடைத்தல், சப்பத்து, இடையிடையே அற்பரோகம், மனக்கவலை, பொருள்வரவுக்குரிய சில காரியங்களில் ஈடுபடுதல், என்பன உண்டாம். இவர்களுக்கு 14ம் 23ம் தேதிகள் நற்பலனுக்குரிய நாள்களாகும். இந்நாட்களில் காதல் விவாகம் அந்நியதேசப்பிரயாணம், கடன்தீர்ப்பு, காணிப்பிரச்சினைத்தீர்ப்புகள் என்பனசெய்ய விசேடநன்மை உண்டாகும். 19ம் தேதியை பிரதான விடயங்களுக்கு விலக்குக.

துலாம்

சித்திரை 3, 4ம் கால்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ம் கால்கள்

எதிர்பாராத சில நிகழ்ச்சிகளினால் மனத்துன்பம். இடையிடையே உஷ்ணரோகம். கண்களில்வலி, அறுவைச்சிகிச்சை செய்யவேண்டிய காரியங்களுக்கு ஏற்ற தீர்மானத்தைச் சரியாக எடுத்தல், காரியங்கள் தடைப்படுதல், வியாபாரம் தொழில் என்பனவற்றிற் பொருள்வரவு, 19-ம் தேதியின் பின் மாதமுற்பகுதியில் தோன்றிய நோய்கள் குணமாதல், தனது பெலம் பங்கமடைதல், இடமாற்றம் சில காரியங்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறுதிருத்தல், ஆணால் மனவிசிகும், பெண்ணால் புருடனுக்கும் கஷ்டம். பெரியோர் சகாயம். இன்பமான பொழுதுபோக்குகளில் ஈடுபடுதல், புண்ணியச்செலவு, கடவுள் வழிபாட்டினால் ஏற்பட்ட விருத்த பெருங்கஷ்டம் நீங்குதல் என்பன உண்டாம். இவர்களுக்கு 15'ம், 24-ம் தேதிகள் சுபபலனுக்குரியன. இக்காலங்களில் தேவதரிசனம், அரசாங்க உத்தியோகத்தரைச் சந்தித்தல், காதல்விவகாரம், நண்பர்களைச் சந்தித்தல் என்பன செய்ய விசேடபலன் உண்டாகும். 20-ம் தேதியைப் பிரதான விடயங்களுக்கு விலக்கிவைக்கவும்.

விருச்சிகம்

விசாகத்து 4-ம் கால், அனுஷம், கேட்டை.

எடுத்த காரியங்கள் யாவும் வெற்றியடைதல், வியாபாரத்தில் அதிகலாபம், மூதலீடுகளில் நல்ல பயன் உண்டாதல், எதிர்பாராத சம்பவங்கள் சில நிகழுதல், அதனால் மனக்கவலை, இடையிடையே அற்ப சுகவீனம், மனக்கவலையடைதல், பொருட்செலவு, பிரயாணம், அலைச்சல், இலட்சுமிகரம், சுகம், பொருள்வரவு, 19-ம் தேதியின்பின் முன்னிருந்த நோய்கள் சுகமாதல், இன்பமான கேளிக்கைகளில் பொழுதுபோக்கு, காதல் விவகாரங்களிற் பூரண வெற்றி இசை, நடனம், விருந்து போன்ற வைபவங்களிற் பங்குபற்றுதல், எடுத்த காரியங்கள் திடீரென எதிர்பாராத தடைகளால் பின்போடப்படுதல் என்பன உண்டாம், இவர்களுக்கு 17-ம் 25-ம் தேதிகள் விசேட பலனுக்குரிய காலமாகும். இக்காலங்களில் நேர்முகப் பரீட்சை, நண்பாகளைச் சந்தித்தல், விவாகம், பிரயாணம் என்பன செய்ய விசேட பலனுண்டாம். 22-ம் தேதியில் இவர்கள் ஓய்வெடுத்துக்கொள்ளுதல் நன்று.

தனு

மூலம், பூராடம், உத்தராடத்து 1-ம் கால்.

எடுத்தகாரியங்கள் யாவும் விசேடசித்தி பெறுதல், தொழிலில் விசேட முன்னேற்றம், மேலதிகாரிகளின் நன்மதிப்பு, எதிர்பார்த்தவாறு சில காரியங்கள் நிறைவேறுதிருத்தல். இன்பமான கேளிக்கைகளில் பொழுதுபோக்கு, சயனபோசனசுகம், இல்லச்சிறப்பு. இடையிடையே வயிற்றில் வாயுபீடை, பனத்துன்பம், வீண்செலவு, பிரயாணக்கஷ்டம், இடமாற்றம், தன்பதித்துக்குரிய சிறு சம்பவம் நிகழுதல், பெரியோர்

சகாயம், பொருள்வரவு, தருமச்செலவு கடன்தொல்லை, நண்பர்களிடையே வாக்குக் கலகம், பெண்களாற் சகாயம், புண்ணியதல தரிசனம் உண்டாகும். இவர்களுக்கு 19,ம் 26-ம் நாள்கள் விசேட பலனுக்குரிய காலங்களாகும்- இக்காலங்களில் விவாகம், பிரயாணம், காதல்விவகாரம், வழக்கு, காணிப்பிரச்சனை, தொழில்தேடுதல் என்பவை சம்பந்தமான விடயங்களில் ஈடுபட விசேட பலனுண்டாம். 24-ம் தேதியை விவாகம், காதல், பிரயாணம் என்பவற்றிற்கு விலக்கிக்கொள்க.

மகரம்

உத்தராடம் 2, 3, 4-ம் கால்கள்
திருவோணம், அவிட்டம், 1, 2-ம் கால்கள்

எடுத்தகாரியங்கள் யாவும் சித்தியடைதல் தொழிலில் புதிய சுறுசுறுப்பு, இடையிடையே காய்ச்சல், சனி, என்பனகாணுதல், எதிர்பாராதவிதமான சில காரியங்களில் நட்டமுண்டாதல், இளைசனங்களாற் சகாயம் மனக்கவலைக்கேற்ற சில சம்பவங்கள் நிகழுதல், பங்காளிகளுடனேயோ, தொழில் மேலதிகாரிகளுடனேயோ சிறுச்சரவு, அதனால் பொருட்செலவு, தனது நற்கீர்த்திக்குப் பங்கமுண்டாதல், 19ம் தேதிக்குப் பின்மாதமுற்பகுதியில் இருந்த நோய்களும் கஷ்டங்களும் நீங்குதல், மனக்கவலை நீங்குதல் கோவில்தரிசனம், விழாக்கள் வைபவங்களிற் பங்குபற்றுதல், இல்லச்சிறப்பு மரணவர்களுக்குத் தோல்வெற்றி என்பன உண்டாம். இவர்களுக்கு 21ம் 27ம் தேதிகள் விசேட நற்பலனுக்குரிய நாள்களாகும். இத்தேதிகளில் விவாகம், கடன்தீர்ப்பு, அரசாங்க உத்தியோகத்தர்களைச் சந்தித்தல், அந்நிய தேசப்பிரயாணம் தொழில்தேடுதல், என்பன சம்பந்தமான விடயங்களைச் செய்ய விசேடபலனுண்டாகும். 26ம் தேதியை ஓய்வுநாளாகக்கொள்க.

கும்பம்

அவிட்டம் 3, 4-ம் கால்கள் சதயம்,
பூரட்டாதி, 1, 2, 3-ம் கால்கள்

எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறுதல், வியாபாரதில் முன்னேற்றம், மேலதிகாரிகளின் நன்மதிப்பைப்பெறுதல், உடம்பில் நோய்நீங்கிக்குணமாதல், முதலீடுகளுக்கேற்றலாபம் பெறுதல், பெரியோர் சகாயத்தால் காரியங்கள் வெற்றியடைதல் பொருள் வரவு, தான் செய்யாத சில விடயங்களுக்காக அவமானமடைதல் மாணவர்களாயின் தேர்வுகளில் வெற்றி, பிரயாணக்கஷ்டம், இல்லச்சிறப்பு. ஆணையின் மனைவிக்கும் பெண்ணையின் புருடனுக்கும் நற்சுகம், நண்பர்களால் மகிழ்வுக்குரிய காரியங்கள் நிகழுதல், புண்ணியதலதரிசனம் உண்டாம். இவர்களுக்கு 23ம் 29ம் தேதிகள் விசேட பலனுக்குரியனவாம். இந்நாட்களில் காணிப்பிரச்சனை, குடும்பவிவகாரம், கடன்பிரசு, உத்தியோகஉயர்வு, சமுத்திரப்பிரயாணம் சம்பந்தமானவிடயங்களில் ஈடுபடின் விசேட பலன் உண்டாகும். 27ம் தேதி இவர்களின் நற்பலனுக்குரிய காலமன்று. அன்று பிரயாணம், வழக்கு, விவாகப்பேச்சு இவற்றைத் தவிர்க்கவும்.

மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

இடையிடையே கண்வலி, பொருள்வரவு, இல்லச்சிறப்பு, இலட்சுமீகரம், வீட்டில், மங்கலகாரியங்கள் நிகழுதல், தெய்வானுகூலம், தான்செய்யாத சில விடயங்களுக்காகப் பழிச்சொற்கேட்டல், முயற்சிக்கேற்ற பலன்குறைவு, பெண்ணுனல் புருடனுக்கும் புருடனுனல் பெண்ணுக்கும் சுகம், மகிழ்ச்சி, நிரவியலாபம், எடுத்தகாரியங்களில் வெற்றி, சுகம், பொருட்செலவு, கடன்படுதல், நண்பர்களிடையே வாக்குவாதம் என்பன உண்டாம். இவர்களுக்கு 24ம் 30ம் தேதிகள் விசேட பலனுக்குரியனவாம். இந்நாள்களில் தெய்வவழிபாடு, பிரயாணம், கொடுக்கல் வாங்கற்பிசகுகள் நீங்குதல், விவாகப்பேச்சு காதல்விவகாரம், பிரயாணம், அரசாங்க உத்தியோகத்தர்களைச் சந்தித்தல், என்பன சம்பந்தமான விடயங்கள் செய்ய விசேடபலன் உண்டாகும். 3ம் தேதி இவர்களுக்குச் சுபபலனுக்குரிய நாளன்று. அன்று வழக்கு உயர் அதிகாரிகளைச் சந்தித்தல் கொள்ளல் கொடுத்தல் செய்தல், பிரயாணம் தவிர்க்கவும்.

சந்திர பலனச் சக்கரம்

சித்தார்த்தி வரு முதல்		வைகாசி மீ வரை	
தேதி	ம. மி.	தேதி	ம. மி.
1 கா	5-53	2 மு இ	9-17
2 மு இ	9-17	4 ந இ	10-00
4 ந இ	11-55	6 பி இ	2-20
6 பி இ	2-20	8 வை	5-34
8 வை	5 34	11 மு ப	10-33
11 மு ப	0-33	13 பி ப	5-51
13 பி ப	5-51	15 பி இ	3-34
15 பி இ	3-34	18 பி ப	2-57
18 பி ப	2-57	23 பி ப	12-41
20 பி இ	2-30	24 மு இ	7-08
23 பி ப	12-41	25 மு இ	8-33
25 மு இ	8-33	27 பி இ	2-03
27 பி இ	2-03	29 பி இ	536
29 பி இ	5-36	31 வை	5-53

சந்திரராசி	ஜன்ம நக்ஷத்திர இராசிக்காரர்களுக்குச் சந்திரன் நிற்கும் ஸ்தானங்கள்											
	மேட	இட	மிது	கர்க் கட	சிங்க	கன்	துலா	விருச் சிக	தனு	மகர	கும்ப	மீன
தனு	9	8	7	6	5	4	3	2	1	12	11	10
மகரம்	10	9	8	7	6	5	4	3	2	1	12	11
கும்பம்	11	10	9	8	7	6	5	4	3	2	1	12
மீனம்	12	11	10	9	8	7	6	5	4	3	2	1
மேடம்	1	12	11	10	9	8	7	6	5	4	3	2
இடபம்	2	1	12	11	10	9	8	7	6	5	4	3
மிதுனம்	3	2	1	12	11	10	9	8	7	6	5	4
கடகம்	4	3	2	11	12	11	10	9	8	7	6	5
சிங்கம்	5	4	3	2	1	12	11	10	9	8	7	6
கன்னி	6	5	4	3	2	1	12	11	10	9	8	7
துலாம்	7	6	5	4	3	2	1	12	11	10	9	8
விருச்சிகம்	8	7	6	5	4	3	2	1	12	11	10	9
தனு	9	8	7	6	5	4	3	2	1	12	11	10
மகரம்	10	9	8	7	6	5	4	3	2	1	12	11

சந்திரன், ஜன்மநக்ஷத்திரராசி முதலாக ஒவ்வொரு இராசிகளிலும் இருக்கும் பலன்.

1-ல் போசனசயனசுகம், வஸ்திராபரணாதி அலங்காரம், களத்திரமித்திரமகிழ்ச்சி, விஷயபோகம்.
2-ல் அதிகசெலவு, அவமானம், காரியவிக்கினம், ஆயாசம், வாக்குக்கலகம்.
3-ல் தனலாபம், வஸ்திரலாபம், போசனசுகம், களத்திரமித்திரசுகம், நற்கீர்த்தி, ஜயம்.
4-ல் யாரிடத்திலும் நம்பிக்கைக்குறைவு, யோசனை, பந்துபீடை, தனநாசம்.
5-ல் தாழ்ந்தநிலை, மனக்குழப்பம், பிரயாணத்தடை. பணக்குறைவு. அசீரணரோகம், நடைக்கஷ்டம்.
6-ல் தனலாபம், தேகசௌக்கியம் சத்துருஜயம் விரும்பியபொருட்பேறு, மனமகிழ்ச்சி. [களத்திரசுகம்.
7-ல் போசனசயனசுகம், பொருட்பேறு, வாகனசௌக்கியம், மரியாதை, பந்துக்களுறவு வஸ்திரலாபம்,
8-ல் மனப்பயம், பசி, வியாதி, எதிர்பாராத ஆபத்து. கலகம், பொருட்சேதம், தேகமெலிவு. மிருத்துபயம்.
9-ல் கட்டுப்படுதல், மனக்கவலை, பிரயாசமிகுதி, வயிற்றில்ரோகம், பொருட்சேதம், சத்துருபீடை, மானக்
10-ல் அதிகாரம், சூரியனுகூலம், பெரியோர்சன்மானம், சந்தோஷம், நற்கீர்த்தி. [குறைவு.
11-ல் தனவிருத்தி, சினேகிதர்கொண்டாட்டம், சயனபோசனசுகம், களத்திரமகிழ்ச்சி, சுபசோபனம்.
12-ல் தனச்செலவு, தனதுசெய்கையினுற்கேடு, பிறர்க்குக்கீழ்ப்படுதல், சோம்பல், பொறுமை, குறைவு.

கவனிப்பு: நிலாகாதி சகல சுபகருமங்களுக்கும், புதியகாரியந் தொடங்குதல், வியாச்சியந்தொடுத்தல், புதிய பொருள் கொள்ளல் விற்றல், பிரயாணம் முதலிய பல செய்கைகளுக்கும் சந்திரபலம் சுபமாயிருத்தல் அவசியமாகும். இதனைக்கவனித்து நடப்போர் பலனுறுதல் திண்ணம்.

உதயலக்கினம் காணும் வழி (யாழ்ப்பாணம்) வைகாசி மீ 1 - 31 வ

தமிழ்த் திகதி	இடபம் மமி மு	இடபம் மமி வ	மிதுனம் மமி வ	கடகம் மமி வ	சிங்கம் மமி வ	கன்னி மமி வ	துலாம் மமி வ	விருச்சிக மமி வ	தனு மமி வ	மகரம் மமி வ	கும்பம் மமி வ	மீனம் மமி வ	மேடம் மமி வ
1	5-53 கா	7 56மூப	10-07மூப	12 14நப	2-15பிப	4-13 பிப	6-17 மா	8 27மூஇ	1035மூஇ	12 31பிஇ	2 17பிஇ	3-59பிஇ	5-49வை
2	5-49	7-52	1-03	12-10	2-11	4-09	6-13	8-23	10-31	12-27நஇ	2-13	3-55	5 45
3	5-45வ	7-48	9-59	12-06	2-07	4-05	6-09	8-19	10-27	12-23	2-09	3-51	5-41
4	5-41	7-44	9-55	12-02	2-03	4-01	6-05	8-15	10-23	12-19	2-05	3-47	5-37
5	5-37	7-40	9-51	11-58	1-59	3-57	6-01	8-11	10-19	12-15	2-01	3-43	5-33
6	5-33	7-36	9-47	11-54	1-55	3-53	5-57	8-07	10-15	12-11	1-57	3-39	5-29பிஇ
7	5-29பிஇ	7-32	9-43	11-50	1-51	3-49	5-53	8-03	10-11	12-07	1-53	3-35	5-25
8	5-24	7-27	9-38	11-45	1-46	3-44	5-48	7-58	10-06	12-02	1-48	3-30	5-20
9	5-20	7-23	9-34	11-41	1-42	3-40	5-44	7-54	10-02	11-58	1-44	3-26	5-16
10	5-16	7-19	9-30	11-37	1-38	3-36	5-40	7-50	9-58	11-54	1-40	3-22	5-12
11	5-12	7-15	9-26	11 33	1-34	3-32	5 36	7-46	9-54	11-50	1-36	3-18	5-08
12	5-08	7-11	9-22	11-29மூப	1-30	3-28	5-32	7-42	9-50	11-46	1-32	3-14	5-04
13	5-05	7-08	9-19	11-26	1-27	3-25	5-29 பிப	7-39	9-47	11-43	1-29	3-11	5-01
14	5-01	7-04	9-15	11-22	1-23	3-21	5-25	7-35	9-43	11-39	1-25	3-07	4-57
15	4-57	7-00	9-11	11-18	1-19	3-17	5-21	7-31	9-39	11-35	1-21	3-03	4-53
16	4-53	6-56	9-07	11-14	1-15	3-13	5-17	7-27	9-35	11-31	1-17	2-59	4-49
17	4-49	6-52	9-03	11-10	1-11	3-09	5-13	7-23	9-31	11 27மூஇ	1-13	2-55	4-45
18	4-45	6-48	8-59	11-06	1-07	3-05	5-09	7-19	9-27	11-23	1-09	2-51	4-41
19	4-41	6-44	8-55	11-02	1-03	3-01	5-05	7-15	9-23	11-19	1-05	2-47	4-37
20	4-37	6-40	8-51	10-58	12-59	2-57	5-01	7-11	9-19	11-15	1-01	2-43	4-33
21	4-33	6-36	8-47	10-54	12-55	2-53	4-57	7-07	9-15	11-11	12-57	2-39	4-30
22	4-30	6-33	8-44	10-51	12-52	2-50	4-54	7-04	9-12	11-08	12-54	2-36	4-26
23	4-26	6-29 கா	8-40	10-47	12-48	2-46	4-50	7-00	9-08	11-04	12 50	2-32	4-22
24	4-22	6-25	8-36	10-43	12-44	2-42	4-46	6-56	9-04	11-00	12-46	2-28	4-18
25	4-18	6-21	8-32	10-39	12-40	2-38	4-42	6-52	9-00	10-56	12-42	2-24	4-14
26	4-14	6-17	8-28	10-35	12-36	2-34	4-38	6-48	8-56	10-52	12-38	2-20	4-10
27	4-10	6-13	8-24	10-31	12-32	2-30	4-34	6-44	8-52	10-48	12-34	2-16	4 06
28	4 06	6-09	8-20	10-27	12-28நப	2-26	4-30	6-40	8-48	10-44	12-30	2-12	4-02
29	4-02	6-05	8-16	10-23	12-24	2-22	4-26	6-36	8-44	10-40	12-26	2-08	3-58
30	3-59	602வை	8-13	10-20	12-21	2-19	4-23	6-33	8-41	10-37	12-23	2 05	3-55
31	3-55	5-58	8-09	10-16	12-17	2-15	4-19	6-29 மா	8-37	10- 33	12-19	2-01	3-51

சித்தார்த்தி ஹூ சித்திரை மீ 31-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு குழந்தை பிறந்தது என வைத்துக்கொள்ளுவோம். அக்குழந்தை பிறந்த நேரத்தின் உதய இலக்கினம், சக்கரத்தின் உதவியுடன் பார்க்கும்பொழுது கன்னி இலக்கினம் என வருகின்றது.

நவக்கிரக மகாமந்திர சாந்தி

சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் — புன்னாலைக்கட்டுவன்

ஒவ்வொருவருக்கும் குரு, சனி, சூரியன், செவ்வாய் முதலான கிரகங்கள் கெட்ட ஸ்தானங்களிலிருந்து நோய், கண்டம். கலகம், சத்துரு, நஷ்டம், கஷ்டம் முதலிய பலன்களை உண்டாக்குகின்றது.

சாந்தி பூஜாவிதி

நவக்கிரகதோஷ பரிகாரத்தை விரும்புவோர்கள் தாங்கள் வேண்டும் கிரகங்களுடைய வாரங்களில் அல்லது சனிவாரத்திலேனும் முக்கூட்டு நெய் தேய்த்து ஸ்நானஞ்செய்து கொள்ளவேண்டும். பின்னர் வணங்கும் கிரகங்களுக்குரிய வஸ்திரம், புஷ்பம், சமித்து தானியங்களைக்கொண்டேனும், அல்லது பொதுவாய், நவதானியம் ஒன்பதுவித பத்திரபுஷ்பம். முக்கூட்டுநெய், பழம், தேங்காய், தாம்பூலம், சந்தனம் தூப தீபத்துடன் கொண்டுபோய் முக்கூட்டு நெய்யால், திருவிளக்கேற்றி அபிஷேகாதிகள் செய்து, வஸ்திரம் தரிப்பித்து, கந்த கதம்ப புஷ்பம் சாத்தி, நவதானியமும், சுத்தபூஜையும் சமர்ப்பித்து தூபதீபங்காட்டி கீழ்சொல்லிய மந்திர தோத்திரத்தை ஒன்பதுதடவை ஜபித்துக்கொண்டே ஒன்பதுதரம் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

இதுபோல் ஒன்பதுநாள் செய்து கடைசிநாளில் தங்கள் சக்திக்குப் போதுமான தானதர்மம் செய்ய நவக்கிரக பிரீதியாகிக் கஷ்டங்கள் விலகும். சுகபோகபாக்கியம் கிடைக்கும்.

நவக்கிரக மஹாமந்திர தோத்திரம்

ஹரி ஓம் சிவ சிவ
அருணை போற்றி
திரி குண புவி வரு
தேவா போற்றி
சரா சரங்களின்
தலைவா போற்றி
பராபர வொளியே
பானுவே போற்றி
நவகோள் நாயக
நடுவே போற்றி
இந்து சேய் புந்தி
அந்தணன் வெள்ளி
மந்தன் ராகு கேது
கோள் போற்றி
கஷ்ட நஷ்ட
கண்ட மணுகாது
இஷ்ட சித்தியும்
இருநில வாழ்வும்
செல்வமும் கீர்த்தியும்
தேவே தருக
நல்லவை யென்றும்
தானே பெருக
அருள்வாய் அருள்வாய்
அருநவ கோள்காள்
சரணம் சரணம்
ஹரிஓம் நமஸ்து.

ஆலயங்களுக்குச் செல்ல முடியாதவர்கள் வீட்டிலேயே கிரக வழிபாட்டைச் செய்யலாம். ஞாயிறு, செவ்வாய், சனிவாரங்களில் சூரிய உத

யத்திற்கு முன்னதாக எழுந்து ஸ்நானம்செய்து வீட்டில் மெழுகிக் கோலமிட்டுத் தீபமேற்றவேண்டும். கோல நடுவில் வாழையிலையில் பச்சையரிசி பரப்பி அதில் நெடுக்கே மூன்று கோடும், குறுக்கே மூன்றுகோடும் போட (ஒன்பது) நவகோண வீடாகும். ஒன்பது நாற்கோண வீடுகளின் மத்தியிலும்

ஓம் சூரியக்கிரக பிரதிஷ்டையாமி
,, சந்திரக்கிரக பிரதிஷ்டையாமி
,, அங்காரகக்கிரக பிரதிஷ்டையாமி
,, புதக்கிரக பிரதிஷ்டையாமி
,, குருக்கிரக பிரதிஷ்டையாமி
,, சுக்கிரக்கிரக பிரதிஷ்டையாமி
,, சனிக்கிரக பிரதிஷ்டையாமி
,, ராகுக்கிரக பிரதிஷ்டையாமி
,, கேதுக்கிரக பிரதிஷ்டையாமி

என்று சொல்லி ஒவ்வொரு முழுப் பச்சைப் பாக்கை நவக்கிரகமாகப் பாவனைசெய்து ஸ்தாபிக்கவும்.

பின்னர் மஞ்சள்மாவில் பிள்ளையார் பிடித்து

''ஹரி ஓம் கணபதி ஆதிக்கணபதி
சக்திக் கணபதி சர்வ வல்லப
விக்ன விநாயக பாத நமஸ்து''

என்று சொல்லி விநாயகரைத் தூப தீபத்துடன் வணங்கிவிட்டு அதன் பின் நவக்கிரகங்களுக்கு வஸ்திர, கந்த, புஷ்ப தானியாதிகள்படைத்து நவக்கிரக மஹாமந்திரத்தை ஒன்பது தடவை சொல்லிக்கொண்டே ஒன்பதுதரம் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்யவும். பின்னர் :

ஓம் சூரியக்கிரகாய நம :
சூரியக்கிரக அதிதேவதாய நம :
ஓம் சந்திரக் கிரகாய நம :
சந்திரக்கிரக அதிதேவதாய நம:
ஓம் அங்காரகக் கிரகாய நம :
அங்காரகக்கிரக அதிதேவதாய நம:
ஓம் புதக்கிரகாய நம :
புதக்கிரக அதி தேவதாய நம :
ஓம் குருக்கிரகாய நம :
குருக்கிரக அதிதேவதாய நம:
ஓம் சுக்கிரக் கிரகாய நம :
சுக்கிரக்கிரக அதிதேவதாய நம :
ஓம் சனிக்கிரகாய நம :
சனிக்கிரக அதிதேவதாய நம :
ஓம் ராகுக்கிரகாய நம :
ராகுக்கிரக அதிதேவதாய நம :
ஓம் கேதுக் கிரகாய நம :
கேதுக்கிரக அதிதேவதாய நம :

என்று தோத்திரம் செய்துகொண்டு. இயன்ற தானதருமங்களைச் செய்ய நவக்கிரகப் பிரீதியாகிச் சர்வசித்தியுண்டாகும். கிரகாதி தோஷங்களும் இதர தோஷங்களும் சாந்தியாகும்; காரியசித்தியும் உண்டாகும்.

நடக்க, எழுந்திருக்க இயலாதவர்களுக்கு இவ் வழிபாட்டை வேறு ஒருவர் நவகோணம் வரையிட்டு, பச்சைப்பாக்கும், ஒன்பது மாவும், பாவுமவைத்து, நவபுஷ்பபத்திரம், நவதானியம் முதலியவைகள் படைத்துத் தூபதீபங்கொடுத்து, நவக்கிரக மஹாமந்திரத்தை ஒன்பது தடவை ஜபித்து, தோஷமுள்ளவருக்கு வலமாக ஒன்பது சுற்றும் சுற்றி, ஒன்பதுதரம் மேலிருந்து கீழே யிறக்கி நவக்கிரக தேவதைகளைச் சிந்தித்துச் சாந்திகழிக்கச் சுகசௌக்கியமுண்டாகும். நோய் தோஷம் முதலியவைகளும் நீங்கும்.

காலஹோரா சக்கரம் (ஆண் பெண் அறியும் முறை)

பகல் 15 நாழிகை வரை (6 — 12)

மீ.	நி.	ஞாயிறு சூரி ஓரை			திங்கள் சந் ஓரை			செவ்வா செ ஓரை			புதன் புத ஓரை			வியாழன் குரு ஓரை			வெள்ளி சுக் ஓரை			சனி சனி ஓரை		
6	12	சூரி	ஆண்		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்	
6	24	சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,	
6	36	செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்	
6	48	புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்	
7	00	குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்	

		சுக் ஓரை			சனி ஓரை			சூரி ஓரை			சந் ஓரை			செ ஓரை			புத ஓரை			குரு ஓரை		
7	12	சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	ஆண்		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்	
7	24	சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்	
7	36	சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்	
7	48	சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,	
8	00	செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்	

		புத ஓரை			குரு ஓரை			சுக் ஓரை			சனி ஓரை			சூரி ஓரை			சந் ஓரை			செ ஓரை		
8	12	புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	ஆண்		சந்	பெண்		செ	ஆண்	
8	24	குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்	
8	36	சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்	
8	48	சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்	
9	00	சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்	

		சந் ஓரை			செ ஓரை			புத ஓரை			குரு ஓரை			சுக் ஓரை			சனி ஓரை			சூரி ஓரை		
9	12	சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	ஆண்	
9	24	செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்	
9	36	புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்	
9	48	குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்	
10	00	சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்	

		சனி ஓரை			சூரி ஓரை			சந் ஓரை			செ ஓரை			புத ஓரை			குரு ஓரை			சுக் ஓரை		
10	12	சனி	ஆண்		சூரி	ஆண்		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்	
10	24	சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்	
10	36	சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,	
10	48	செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்	
11	00	புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்	

		குரு ஓரை			சுக் ஓரை			சனி ஓரை			சூரி ஓரை			சந் ஓரை			செ ஓரை			புத ஓரை		
11	12	குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	ஆண்		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்	
11	24	சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்	
11	36	சனி	ஆண்		சூரி	,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்	
11	48	சூரி	,,		சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்	
12	00	சந்	பெண்		செ	ஆண்		புத	பெண்		குரு	ஆண்		சுக்	பெண்		சனி	ஆண்		சூரி	,,	

இங்கு சக்கர வடிவமாகக் காட்டப்படும் ஹோராசக்கரமானது பூமத்திய ஸ்தான மாகிய சம அகசுடைய இடத்திற்காகும். இஷ்ட ஸ்தலத்திற்கும் சம அளவுள்ள பகல் இரவுகளே 12-ஆல் வகுத்து ஒவ்வொரு ஹோரா காலத்தையும் இவ்வளவென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஆதலால், அந்தந்த இடங்களுக்குரிய சூரிய உதய மணி மினிற்றுக்களைக் கூட்டிப் பார்க்கவேண்டும். (அகசு - பகல் இரவு)

திருமந்திரம் : 4.

தாயினும் நல்லன் தாழ்சடையோனே

— வ. சுகசர்மா —

இறைவனுடைய தன்மை என்ன? என்ற கேள்விக்கு திருமூலர் பல பாட்டுகளில் பதில் கூறியுள்ளார். உலகத்திலே இருவித தன்மைகளை நாம் காண்கிறோம். அக்கினி வெப்பம் மிகுந்தது. தண்ணீர் தட்பம் உடையது. அவ்வாறே சூரியன் வெப்பம் மிகுபொருள் சந்திரன் தட்பம் மிகுபொருள்.

சாதாரணமாக உலகத்தை ஆளும் அரசனுக்கு தண்ணளியும் அதேசமயம் அச்சுறுத்தும் மறக்கருணையும் இருப்பதாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

"ஞாயிறு அனைய நின்பகைவர்க்கு
திங்கள் அனையை எம்மனோர்க்கே"

எனப் புறநானூறு கூறுகிறது.

"ஈண்டுநீர் மிசை தோன்றி
யிருள் சீக்கும் சுடரேபோல்
வேண்டாதார் நெஞ்சுட்க
வெருவந்த கொடுமையும்
நீண்டு தோன்றுயர் குடை
நிழலெனச் சேர்ந்தார்க்கு
காண்டகு மதியெனக்
கதிர்விடு தன்மையும்"

என்பது கலித்தொகை.

இதேபோன்று பரிபாடல் என்னும் நூலில் .. நின்வெண்மையும் விளக்கமு ஞாயிற்றுள, நின் தண்மையும் சாயலுந் திங்களுள" எனத் திருமால் புகழப்படுகிறார். ஆனால் இறைவன் அருளுக்கு இந்த உவமைகள் சரியானதா? அளவிட முடியாத ஒரு பொருளுக்கு அளவு கூறுவது முடியாத காரியம் ஒரு அளவைக் காட்டி இதற்குமேல் எனக் கூறலாமே ஒழிய அவ்வளவுதான் என்று வரையறுக்கமுடியாது.

திருநாவுக்கரசரது தேவாரம் இதற்குத்துணை புரிகிறது,

உலகத்தவர் இனிதெனக்கருதும் சிலபொருட்களை நம்முன் வைக்கிறார் நாவுக்கரசர். கனி, கரும்பிலிருந்து எடுத்தபாகு. பெண்கள், அரசபோகம், என்பன இவை போல்வதுதான் இறைவன் இனிமை என்று அவர் கூறவில்லை. இவற்றை எல்லையாகவைத்து இவற்றிலும் ஈசன் இனியவன் என்று கூறுகிறார்.

"கனியினுங்கட்டி
பட்டகருப்பினும்
பனிம லர்க்குழற்
பாவைநல் லாரினும்
தனிமுடிகவித்
தாளு மரசினும்
இனியன் தன்னடைந்
தார்க்கிடை மருதனே"

மேலே கூறிய இலக்கிய எடுத்துக்காட்டுதல்கள் போலல்லாமல் நாவுக்கரசர் வழியையே தன் வழியாகக் கொண்டு திருமூலர் இறைவன் இருவித அருளையும் கூறுமிடத்து "தீயினும் வெய்யன் புன

லினுந் தண்ணியன் ஆயினும் ஈசன் அருளறிவாரில்லை, என்று கூறுகிறார்.

இறைவன் எங்கும் நிறைந்திருப்பவர் என்றாலும் அடியவர்க்கு மிக நெருக்கத்திலும் மற்றவர்க்கு தூரத்திலும் இருக்கிறார் ‘‘நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்’’ இறைவன் ஆலை தூரநின்றாலும் அவர் நல்லவர்தான். நமது செயல்களை இறைவன் அருள் இன்றிச் செய்ய முடியாது அவனின்றி ஓர் அணுவும் அசையாது மனதால் தியானியாது தூரத்தேநிற்பவர்க்கு அவர்களை நடாத்தும் தூரத்தே விளங்கும் ஒளியாகவும் மனத்தால் தியானிப்பவருக்கு இந்நவகை இந்திரியங்களிலும் தாங்கள் செல்லுதற்குரிய பொருள்களிலே சென்று தங்குதலில்லை யாகும்படி மனசிலை பார்க்கப்படும் (ஓவற இமைக்கும் அவிரொளியாகவும்) விளங்குகின்றார் இதனை ‘‘சேனினும் நல்லன் அணியன் நல்லன் பார்க்கு’’ எனத் திருமூலர் கூறினர்.

தலையாய் அன்பிற்கு உதாரணம் தாயன்பு. சுந்தர மூர்த்திநாயனாரை கிழ உருவத்தேடு வந்து ஆட்கொண்டு திருவெண்ணெய் நல்லூர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார் இறைவன்

அங்கே இறைவர் தாமே ஆட்கொண்டதாகக் கூறுகிறார். இறைவனுடைய குரலைக்கேட்ட சுந்தர மூர்த்தி நாயனாரின் நிலையை சேக்கிழார் பின்வரும் அடிகளில் விளக்குகிறார்.

‘‘ என்றெழு மோசை கேளா
ஈன்றவான் கனைப்புக்கேட்ட
கன்று போற் கதறி நம்பி
கரசரணுதியங்கத்
துன்றிய புளக மாகத்
தொழுதகை தலைமேலாக
மன்றுளீர் செயலோ வந்து
வலிய வாட் கொண்ட தென்றார்’’
தாயன்பிலும் எல்லை கடந்த ’’

அன்பென்று உண்டு. அதுதான் இறைவன் உயிர்களிடத்தில் செலுத்தும் அன்பு ‘‘பால் நினைந்தூட்டும் தாயினும்’’ சான்ற பர்வு. தாழ் சடையோனே அன்பைக் காட்ட தாயன்பு ஒரு எல்லையல்லாது இரண்டும் சமனானவை. அல்ல. இனி முழுச் செய்யுளையும் பார்ப்போம்

‘‘ தீயினும் வெய்யன்
புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன்
அருளறிவார் இல்லை
சேயினும் நல்லன்
அணியன் நல்லன் பார்க்கு
தாயினும் நல்லன்
தாழ்சடை யோனே,,

மக்களும் மறதியும்

மக்களில் பெரும்பான்மையோர் ஒரு பூந்தோட்டத்தின் அழகைக் கண்டு இரசிக்கின்றனர். அத்தோட்டத்தை உருவாக்கியவனைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. அதேவிதத்தில் இப்பிரபஞ்சம் என்னும் தோட்டத்தை மக்கள் கண்டு களித்துக்கொண்டிருக்கின்றார். இதற்கு ஆதிமூலமாயிருக்கும் இறைவனைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. உலகுக்கு முதற் காரணமாகிய இறைவனை அடைவதுதான் மானுடப்பிறவியின் குறிக்கோள் தோட்டத்தை ரசிப்பதற்கல்ல.

ஓர் அறிமுகம் :

சக்தி வழிபாட்டு நூல்கள்

எழுதுபவர் : "பஞ்சதசாக்ஷரி"

சங்கரனுர் மனமங்கலமாய்த் திகழும் அதே வேளையில் அவளே அவர்தமக்கு அன்னையும் ஆகின்ற தன்மையினுல் ஏனைக் கடவுளர் யாவர்க்கும் மேலே இறைவியாய் நிற்கின்ற சக்திப் பரம்பொருளே வழிபடுகின்ற மார்க்கம் சாக்தம் எனப்படுகிறது. அண்டபகிரண்டங்களே இயக்கும் அரிய சக்திக்கு அன்னை என்று பெயர் கொடுத்து அழகுத் திரு உருக்கொடுத்து அன்போடு உருகி நிற்கும் போது சக்திவழிபாடு உருவாகின்றது.

வேதம் பொதுப்பிரமாணமாயும் தந்திரங்கள் என்றழைக்கப்படும் சாக்த ஆகமங்கள் சிறப்புப் பிரமாணமாயும் நின்று வழி நடத்த, ஆதியில் அகஸ்தியர், துர்வாஸர், ஹயக்ரீவர் போன்ற மஹாமுனிவர்கள் முதல் இன்று மஹாகவி சுப்ரமணிய பாரதி வரை பல் வேறு பட்டசக்தி உபாசகர்கள் சக்தி வழிபாட்டை வளம்படுத்தியிருக்கின்றனர், இவர்கள் வழிபாட்டு முறைகள், மந்திர ஜபங்கள், பிரார்த்தனைப்பாடல்கள் போன்றவற்றை இயற்றித் தந்துள்ளனர்.

இவ்வகையில், வடமொழியிலும் தமிழிலும் மற்றும் பிறமொழிகளிலும் அநேக நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனுல், யாவும் சுலபத்தில் கிடைப்பன அல்ல. சில, குருமுகமாக உபதேசிக்கப்பட்டு வருகின்ற ரஹஸ்யமான நூல்கள். வேறுசில, நம்போன்ற சாமான்யர்களால் புரிந்துகொள்ள முடியாத தத்துவார்த்தப் பெட்டகங்கள். தேவி உபநிஷத்துக்கள்; தந்திரங்கள், பாவனோபநிஷத், ஸுகிர்த ஹிதை, வரிவஸ்யா ரஹஸ்யம் போன்றவை இத்தகைய அற்புதமான மந்த்ர சாஸ்திரங்களாகும்.

இவற்றைப் படித்தறிந்ததன் மூலமும் அன்னையை உபாசித்ததன் மூலமும் தாம்பெற்ற அனுபவங்களைக்கொண்டு ஆதிசங்கரர் போன்றவர்களும், அபிராமிபட்டர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், பாரதியார் போன்றவர்களும் சில இலகுவான நூல்களையும் தனிப்பாட்டல்களையும், நமக்கு அளித்துச் சென்றுள்ளனர்.

இவற்றுள் சுலபமான முறையில் நம்மால் அணுகக்கூடியவையும், பயன்படுத்தக் கூடியவையுமான சில நூல்களை - புராண நூல்களாகவும், வழிபாட்டு நூல் களாகவும், பிரார்த்தனை நூல்களாகவும் தனிப்பாடல் களாகவும் ஆங்காங்கே சிதறிக்

கிடக்கும் சிலவற்றை எடுத்து அவற்றின் நயங்களை ஆய்ந்தும், பயன்களை உரைத்தும்; நாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறும்படி செய்கின்ற ஒரு சிறு அறிமுக முயற்சி யே இது. இதன்மூலம் அடியார்கள் தேவி வழிபாட்டு நூல்களைத் தேடிப் படித்தும் - அவளைப் பணிந்து பிரார்த் தனை செய்தும் பயன் பெறுவார் களாயின் இம் முயற்சி பயன் உடைத் தாகும். இந்தவரிசையில் முதலில் மிக இலகுவான ஒரு நூலான ‘‘அபிராமி அந்தாதி’’யை எடுத் துக் கொள்வோம்.

1. அபிராமி அந்தாதி

இலகுதமிழிலே உள்ள இனிய தொரு சக்திவழிபாட்டு நூல் அபி ராமிஅந்தாதி. அபிராமி என்பது பே ரழகுடையவள் என்ற பொருள் உடையது. அழகுக்கு ஒருவரும் ஒவ் வாத வல்லியாகிய அபிராமி வீற் றிருக்கும் தலம் திருக்கடவூர். தே வர்கள் திருப்பாற் கடல் கடைந்து அமிர்தம் எடுத்துச் செல்கையில் அந்த அமிர்தக் குடத்தை இத் தலத்தில் வைத்த பின்னர் மறுபடி எடுக்க முடியாமல் அந்தக் குடம் (குடம் - கடம்) லிங்கவடிவமாக மாறியிருக்கக்கண்ட தேவர்கள் அவரைத்துதித்து வழிபட்டனர். அந்த அமிர்தகடேஸ்வரரையும், அபிராமி அம்மையையும் கொண்ட திருத்தலம் தான் வில்வாரண்யம் என்ற மற்றொருபேர் கொண்ட திருக்கடவூர்.

எம்பிரான், மார்க்கண்டேயர்க் காக இயமனைக்காலால் உதைத்ததும் இத்தலத்தில்தான். குங்கிலியக்கலய நாயனரும் காரி நாயனரும், உய்ய வந்த தேவரும் அவதரித்த பெருமை கொண்டதும் தேவாரப் பாடல் பெற்றதுமான இத்தலத்திலே சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அபிராமிபட்டர் என்பவ ரால் அபிராமி அம்மைமீது பாடப் பெற்ற நூற்றிரண்டு பாடல்களைக் கொண்டது இந்நூல்.

அந்தாதி என்பது ஒரு பாடலின் அந்தத்தை மறுபாடல் ஆதியாகக் கொண்டு தொடரும். இந்நூலில் இறுதிப்பாடலின் அந்தம் முதல் ஆதியாகவும் அமைந்து அந்தாதி மாலையாகத் தொடுக்கப்பட்டு அழகு பொலிகிறது. இம்மாலை நூறுபாடல் களும், காப்புப்பாடல் ஒன்றும் நூற் பயன் ஒன்றுமாகச் சேர்த்தே நூற்றி ரண்டு பாடல்களாகின்றன.

சுவையான பழகு தமிழ்இலக்கிய மாகவும், அற்புதமான பயன் நல் கும் பிரார்த்தனை நூலாகவும் ஒரு நல்ல மந்த்ர சாஸ்த்ர நூலாகவும் விளங்கும் இந்நூல் தோன்றியது பற்றி சுவையான வரலாறு உண்டு.

அபிராமிபட்டர் சக்தி உபா சனையில் மூழ்கித் திளைத்தவர். அன்னை நினைவன்றி வேறு நினை வே இல்லாமல் திரிந்ததால் அவரைப் பித்தரென மற்றோர் கேலி செய் தனர். இவர் ஒரு நாள் அன்னையின் சந்நிதியில் தியானத்தில் அமர்ந் திருந்தார். அப்போது தஞ்சை மன்னர் சரபோகி மஹாராஜா அங்கு வந்தார். தான் வந்தபோது மரியாதை செய்யாது தியானத்

திலாழ்ந்திருந்த அவரைக்கண்ட மன்னன் அவரோடு பேச்சுக்கொடுக்க வேண்டி "பட்டரே, இன்று என்ன திதி ?" என்று கேட்டார். அன்று உண்மையில் அமாவாசை திதி. ஆனல், பட்டரோ தியானத்தில் மூழ்கி - அன்னையின் அருட்பேரொளி யிலே கலந்து நின்றமையினல் சட் டென்று தடுமாறி "பௌர்ணமி" என்று உரைத்தார். அவர் சரியான ஒரு பித்தன் என்று சொல்லி அரசர் போய்விட்டார்.

தியானம் கலைந்தெழுந்தபட்டர் பிரான் நடந்ததை அறிந்துவருந் தினர். "தாயே! உன்னையே நம்பி யிருக்கும் உன் அடியவன் பொய் உரைத்தல் உனக்குச் சம்மதமா ? நீ அன்றே என்னைத் தடுத்தாண்டு கொண்டபின்னர் இனி என்னைக் காத்தல் உன்பொறுப்பன்றே" என்று அரற்றினர். தனது வாக்கை உண்மையாக்கவேண்டி அன்னை அபி ராமி விடை சொல்லியே ஆகவேண்டு மெனச் சங்கற்பித்து ஆலயவாயிலை அடைந்தார்,

பெரிய திக்குழி ஒன்று செய்து அதன்மேல் நூறு கயிறுகளால் ஆன உறி ஒன்று தொங்க விட்டு அதில் ஏறியமர்ந்து அன்னையைத் துதித்து அந்தாதி பாடலானர். முதலில் விநாயகர் மீது காப்பும்பாடி விட்டு அம்பிகையைத் தியானிக்கிறார் அவள் திருவடிவத்தை உள்ளத்திரை யில் ஓவியமாக வரைகிறார். அவளின் திருவுருவம் அங்கே செங்கதி ராகப் பொலிந்து ஒளிர்கிறது. ஆனல், சாதாரண சூரியன்போலக் கண்பார் வைக்கு இயலாத சூரியன் அல்ல! கண்ணுல் பார்க்கமுடிந்த - குளிர் மையான - வடிவமாக ஒளிர்கிறாள் உடனே அவர் "உதிக்கின்ற செங் கதிர் ....." என்று ஆரம்பிக்கிறார் "உத்யத்பாநு சஹஸ்ராபா" — லலிதாசஹஸ்ர நாமம்]

தொடர்ந்து அவர் தேவியின் திருவுருவை விதவிதமாக வர்ணிக் கிறார். நெற்றியில் இடப்பட்ட சிந் துரத் திலகமாவும், அறிஞர் மதிக்கும் ஞான மாணிக்கமாகவும், மாதுளம் போதின் வண்ணத்தவளாயும் 'தாடி மீகு சுமப்ரபா' - லலிதாஸஹஸ்ர நாமம்] லக்ஷ்மி தேவியால் வணங் கப்படுபவளாகவும் வர்ணித்து அவளைத் தன் துணையாக அழைக்கின் றார்.

(தொடரும்)

இறையருள் இலகுவில் கிடைக்க

"காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தியோடுநின்று தவஞ்செய்ய வேண்டா திருமார்பனை சிந்தையுண்வைத்துமென்பீர் வாயோது வேதம் மல்கின்ற தொல்சீர் மறையாளர் என்றும் முறையால் வளர்த்த தியோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத் திருச்சித்ர கூடம் சென்று சேர்மின்க ளே"

— திருமங்கையாழ்வார் (பெரிய திருமொழி)

துவி களத்திராதி யோகங்கள்

சோதிடர் சு. அ. சுப்பிரமணியக்குருக்கள். கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

ஏழ்மையில் பிறந்து சுயமுயற்சியால் கோடீஸ்வரனாகி சிறுவயது முதலே விபசாரம் புரிந்தும், பெண்கள் மயங்கும்படியான அழகுடையவனாய் இருந்தும், தராதரமின்றி காமதூரனால், விபசார வழக்குடையவனாய் இருந்து, இறக்கும் தறுவாயில் பாபராகி விட்ட ஒருவரது ஜாதகம்'

* * * *

சகவாச தோஷத்தால் விபசாரம் செய்துவரும் ஒருவரின் ஜாதகம்- இந்த ஜாதகங்களிலிருந்து விபசார யோகத்தைக்கூறும் யோகங்கள் இப்படிப் பொருத்தமாய் அமைந்திருக்கின்றன என்பதை ஊன்றிக் கவனிக்கவேண்டும். — கட்டுரை ஆசிரியர்

இதன்பிறகு மற்றொரு முக்கியமான விஷயத்தையும் ஊன்றிக் கவனிக்கவேண்டும். ஒருவருக்கு விவாகம் ஆகலாம். ஆனால் குடும்பத்துடன் வாழாமல் புருஷன் மனைவி இருவரும் ஒன்றுபோலாமல் பிரிந்து தனித் தனியே வாழ்ந்து வருவதும் காணப்படுகிறது. இந்த விஷயத்தை ஜாதகத்தில் முக்கியமாக கவனிக்கவேண்டியது. இது பற்றி பலதீபிகா போன்றவைகளில் சிற்சில குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு பெண்களின் ஜாதகத்தில் லக்னாதிபதியும், ஸப்தமாதிபதியும் துவி தீவாதசபாவதித்தில் அதாவது பரஸ்பரம் ஒருவருக்கொருவன் 2, 12ல் உள்ளனவோ அப்பெண்ணை கல்யாணம் செய்துகொள்ள வேண்டாம். என்று கூறி இருக்கிறது. மற்றும் ஆண், பெண் இரு ஜாதகங்களில் ஏதாவதொன்றில் லக்னாதிபனும், சப்தமாதிபனும் ஷஷ்டாஷ்டமாக இருந்தாலும் அதாவது 6, 8ல் பரஸ்பரம் இருந்தாலும் விவாகமாயினும் பிரிந்துவாழ்வர். அம்சலக்னம் ஷஷ்டாஷ்டகமாயிருந்தாலும் இப்படியே லக்னாதிபனே அல்லது ஸப்தமாதிபனே அஸ்தங்கத தோஷத்தை அடைந்தாலும் இந்ததோஷம் சம்பவிக்கலாம். இவற்றை விளக்க சில உதாரணங்கள் கொடுக்கிறோம்.

பிறப்பு 1- 10- 1847 (5-20 மாலை) சூரியன் ஹஸ்தம்-2 சுக்கிரம் ஹஸ்தம்-4 இது உலகப்பிரசித்தி பெற்றவரும், பிரபல கல்விமானும், புதிய ஆத்மீகசிந்தனை சக்தியைப் பரப்பி இந்துமதத்தை வளர்த்தவரும், மேல் நாட்டில் பிறந்து வளர்ந்தாலும் இந்த பாரததேசத்தைத் தாயகமாகக்கொண்டு வாழ்ந்து இறந்தவருமான அன்னிபெசன்டு அம்மையாரின் ஜாதகம். இங்கு லக்னாதிபதியும் ஸப்தமாதிபதியும் ஷஷ்டாஷ்டகமாயிருப்பதும் கவனிக்கத்தக்கது. மேலும் ஸப்தமாதிபதியும் களத்திர காரகனுமான சுக்கிரன் அஸ்தங்கத தோஷத்தை அடைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. ஆகையினால் தான் இந்த அம்மையார் மணவாழ்க்கை நடத்த முடியாமல் கணவனைப்பிரிந்து தனித்து வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தாள்.

மற்றொரு ஜாதகம். இது ஒரு மகானின் ஜாதகம். சிறந்த கல்விமானும் யோகீஸ்வரரும், தேசபக்தரும், தியாகியுமான ஸ்ரீ அரவிந்தரின் ஜாதகம். இந்தஜாதகத்திலும் ஸப்தமாதியதியும் லக்னாதிபதியும் பரஸ்பரம் த்ரிர்துவாதமாக இருப்பதைக்காணலாம். இவரும் தன்மனைவியுடன் வாழமுடியவில்லை. என்பதைக் கவனிக்கவேண்டும்.

இது ஒரு பெண்ணின் ஜாதகம். இவர் கல்யாணம் செய்துகொண்டு ஒரு குழந்தைக்கு தாயானபின்பு புருஷனுடன் வாழாமல் பிரிந்து வாழ்ந்தவர். மனைவிக்கும் புருஷனுக்கும் அதிகமான விரோதமுண்டு. இங்கேயும் லக்னாதிபனும், ஸப்தமாதிபனும் துவித்வாதசமமாகயிருக்கின்றனர்.

(1)

ஒரு பெண்ணின் ஜாதகம்



(3)

மற்றுமொரு ஜாதகம்



(1)

மற்றுமொரு பெண் ஜாதகம்



(2)



(4)

ஒரு மத ஸ்தாபகரின் ஜாதகம்



(4)



(தொடரும்)

அருளும் பொருளும்

— திருமதி பொன். கிருஷ்ணபிள்ளை —

"அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை"

என்பது ஆன்றோர் வாக்கு. இதன் பேருண்மையை உணர்ந்தவர்கள் அருட்செல்வர்கள்.

அகங்காரத்தின் ஆணிவேரை அகற்றும் வரை மக்களின் உள்ளத்தில் அருளுக்கே இடமில்லை. எல்லாவற்றிற்கும் நானேகர்த்தர்" என்றெண்ணும் அகந்தையாகிய ஆணவக்கிழங்கை, அடியோடு அகழ்ந்து எடுத்து எறிந்து விட்டால் மக்கள் மனதில் பணிவு தானே உண்டாகும். பணிவுண்டானால் அங்கே அருள் உண்டாகி, ஞானம் உதிக்கிறது.

குமர குருபரசுவாமிகள் மக்கள் உள்ளத்தை ஊடுருவும் வகையில் 'அகந்தைக்கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தெழுமபர் உளக்கோயிற்றேறறும் விளக்கே" என்று அழகாகக் கூறுகிறார். அகங்காரத்தின் ஆணிவேரை அகற்றும் வரை அருளுக்கு இடமேயில்லை இராஜசிகன் என்ற அரசன் பொருளால் அடைந்த அகங்காரத்தின் ஆணிவேரில் கோயில் கட்டினான். ஆனால் பூசலாரோ அருள் என்னும் அன்பின் ஆணிவேரில் மனத்திலே கோயில் கட்டி, இறைவனை அங்கே எழுப்பினார். இதுவே அருளுக்கும் பொருளுக்கும் உள்ள வேறுபாடு. வாழ்க்கையை வளமாக்க எவ்வாறு பொருள் அத்தியாவசியமோ, அவ்வளவுக்கு அருளும் உதித்தால்தான் மக்கள் வாழ்வு சுபீட்சமாகும்.

அருளும் பொருளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டசெயல்களைச் செய்ய வல்லதாயினும் சிந்தித்துச் செயலாற்றினால் உயர் பதவி அடையலாம். அரசன் தேடிய பணம் தர்மத்தால் ஏற்பட்ட செல்வம் என்பதை உணர்ந்த மணிவாசகப் பெருமான் அரசனைத்தியவழியில் செல்ல விடாது இறைபணிக்கு ஆளாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், தர்மத்தைநிலை நாட்டவிரும்பி தனது விருப்பப்படி, குதிரை வாங்கக் கொடுத்த பணத்தைக் கொண்டு கோயில் கட்டினார். அதனால் ஏற்பட்டகஷ்டம்கொஞ்சமல்ல யாவும் இறையருள் என்று எண்ணி அவன் திருவடிகளில் தன்னை ஒப்படைத்த மணிவாசகப் பெருமானை எந்த இடையூறும் தாக்க வில்லை. "அவன் அருளாலே அவன் தாழ்" வணங்கினார்.

தாய்க்குரங்கு எவ்வளவு வேகமாகப் பாய்ந்தாலும், குட்டி சிறிய குட்டியானாலும், அதன் பிடி பெலமாகவே இருக்கும். அல்லது குட்டியின் கதி என்ன? அதே போன்று நமது உள்ளமும் குரங்குக் குட்டியின் பிடிபோல் இறைவனின் திருவடிகளைப் பற்றிப்பிடித்து அவன் அருள் பெற முயற்சிக்கவேண்டும்.

சுந்தரர் பொருள் வேண்டினார். ஆனால் எதற்காக வேண்டினார் எனபதன் உட் பொருளை நாம் உற்று நோக்க வேண்டும் காட்டில் வேடுவர்போல் வந்து பணத்தைப் பறிக்கும்போதும் இறைவனைக்கேட்கிறார் எதற்காக இந்தக்காட்டில் இருக்கிறாய் இப்படியானவர் இருந்து துன்பஞ் செய்வரைப் பார்த்துக்கொண்டும் பேசாதிருக்கிறாய். காரியமில்லை. நான் வாழாவிட்டாலும் நீவாழ்ந்து போ" என்று அருளின் காரணமாக தனக்கும் இறைவனுக்கும் உள்ள தோழமை நெருக்கத்தால் கேட்கிறார். இதேபோன்று அநுபூதியில் அருணகிரியார் "வாழ்வாய் இனி நீமயில் வாகனனே" என்று உரிமையான குரலிற்கேட்கிறார் நாமும் இறைவனை உரிமையுடன் கேட்கப் பழகவேண்டும். இதற்காக வியாபார முறையில் கேட்கக் கூடாது. நூறு மோதகம் அவிப்பேன் பிள்ளையின் வருத்தமோ, சோதனையோ தீர்த்தியாக வேண்டு மென்றும், நூற்றெட்டுத்தேங்காய் உடைப்பேன். கட்டிடம் போடுவேன் நல்ல உத்தியோக உயர்வு வேண்டு மென்றே இறைவனை வேண்டக் கூடாது. வேண்டாதீதக்கது அறிவான் இறைவன்.

கூலிக்கு உழைக்கும் ஒருவன் தனது கையால்கஷ்டப்பட்டு வேலை செய்து ஊதியம் பெறும் போது மகிழ்ச்சியடைகிறான். அதேபோல் பந்து விளையாடும்

ஒருவன் தனது கை. காலை உபயோகித்து அங்கே வெற்றி கண்டு மகிழ்கிறான். அவனது குறிக்கோள் ''வெற்றி'' என்ற ஒன்றேதான் கஷ்டம், பகை, தாகம், களைப்பு அவனுக்கிடையாது. நமது சிந்தையும் நல்லருள் பெறவேண்டும் என்ற ஒரே நோக்கமாக இருந்து கொண்டு செயலாற்றவேண்டும் 'எத்தவத்தைச் செய்தாலும் ஏதவஸ்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே'' என்பது வாக்கு.

சேற்று மீன் சேற்றில் இருந்து வெளிப் பட்டாலும், தாமரை சேற்று நீரிலிருந்து மேல் வந்தாலும், சேறுபடிவதில்லை. நாமும் எவ்வளவு உலக போகங்களுடன் வாழ்ந்தாலும் அவற்றில் பற்று வையாது வாழ்ந்து நல்லருள் பெற வேண்டும்.

ஆசை அறுது. மேலும் தூண்டிக் கொண்டிருக்கும் பிச்சைக்காரன் ஒருவனுக்கு தொண்ணூற் றொன்பது காசைக் கொடுத்து ஒரு காசை நாம் வைத்துக்கொண்டாலும், வாங்கியதில் திருப்தியுறுது எமது கையில் உள்ள ஒருகாசு கிடைத்தால் ஒரு ரூபாயாகுமே என்று ஏங்குவான். இதுதான் மனித இயல்பு.

தவளை ஊர்ந்துசெல்லாது தாவித்தாவிப் போகும். அதே போன்று, நாமும் மனதை ஒருநிலைப் படுத்திக் கொண்டு வந்தாலும் தவளை போன்று வேறு எண்ணங்களில் தாவித்திரிவதால், அருளைப் பெறுவது சிரமமாய் இருக்கிறது, ''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமிது'' என்று பெரியார் கூறுகிறார்.

பெரருளால் வெளியுலக போகங்களை அனுபவிக்க இயலுமே தவிர எமது தொல்லை யாத வழிக்கு உதவமாட்டாது. அயலூருக்குப் போகப் புறப்பட்டாலும் எத்தனையோ ஆயத்தங்கள் செய்து புறப்படுகிறோம். ஆகவே என்றுமே திரும்பிவராத பயணத்திற்கு எவ்வளவோ ஆயத்தங்கள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எமக்குவரவேண்டும். ஒருவருக்கு மரணம் நேர்ந்து விட்டால் அவரது இறுதியந்திரையில் பலவாறுகப் பேசப்படுகிறது. இதில் ''சுடலை ஞானம்'' மயானம் போய்த் திருப்பி வந்து தனது கடமைகள் முடியும் வரை ஊரில் பேசுவார்கள்- அங்கே சிறிது அருள்ஞானம் பேசப்படும். பின்னால் அவருக்கு மணரச்சடங்குக்குஎவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு ஊரில் விசேஷமாய் நடந்தது. பற்றிய சர்ச்சையில் சுடலை ஞானம் மறந்து விடும். நாம் பொருளுக்கு முதலிடமும் அருளுக்கு இரண்டாவது இடமும் கொடுக்கிறோம்- தற்காலத்தில் ஆலயங்களுக்குச் சென்றாலும் ஆலயக்கட்டிடத்தைப்பற்றிச் சிலர் விபரிக்கிறார்களேயல்லாது மூர்த்தத்தின் பெருமையைப்பற்றிச் சொல்லுவதில்லை அதனால் இளஞ் சந்ததியினருக்கு பயத்தினால் ஏற்படும் 'பயபக்தி' உண்டாவதில்லை, 'இறைதேடும் போதும் இறையைத் தேட வேண்டுமென்று ஆன்றோர் கூறியுள்ளார்கள்,

தனிவீட்டில் இருப்பவனுக்குப் பல வசதிகள் உண்டு. ஆனால் பல குடும்பங்களுடன் ஒரு வீட்டில் சேர்ந்து வாழ்பவனுக்கு பல இடைஞ்சல் உண்டு. ஆகவே அருளைத் தேடவோ பொருளைத்தேடவோ தனிமை மிகச்சிறந்தது: பிஞ்சுதோன்றும் பொழுது பூதானே வீழ்ந்து விடுவது போல் ஈசுரவனுடைய அனுக்கிரகம் வாய்க்கப்பெற்றால் எங்கள் கருமங்கள் தானாக நின்றுவிடுகிறது. மனிதன், உலகத்தில் வாழ்ந்தாலும் பற்றற்றவனாகி வாழவேண்டும். அமைதியாய் இருக்கும் சடலில் கப்பலைச் செலுத்துபவன் பெரிய சிறந்த மாலுமியல்ல. புயல்காற்றும், கொந்தளிப்பும் கொண்டு அலைஎழுந்து வரும் நிலையில், அதை எதிர்த்து சமாளித்து கப்பலை ஓட்டும் சிறந்த மாலுமிபோன்று, வாழ்க்கையில் பல இன்னல்கள் சேர்ந்தாலும் கலியாது, வாழ்ந்து வெற்றிகாண வேண்டும்.

இதனால் நம்முன்னோர் மூன்று ஏணிபோடாக ஜோதிடரை அணுகுகிறார்கள். ஜோதிஎன்பது வெளிச்சம், விளக்கு உள்ள இடம். நாம் வெளிச்சத்தை வைத்துக்கொண்டு கிணற்றில் விழலாமா? எமது காலபோக்கை முன் கூட்டியே அறிந்து, கண்ணீர் வருவது கண்ணிற் புருவத்தில் வந்ததுபோல் விதித்து நடக்கலாம்.

இற்றைக்கு நூறுண்டுகளுக்கு முன்பே ஜோதிடர் வல்லிபுரம் என்ற பெரியார் இந்த ஊரெழுக்கிராமத்திலே வாழ்ந்திருக்கிறார். நாவலர் பெருமானின் வாழ்க்கை வழிநடந்து மக்களுக்கு வழிகாட்டியாயிருந்தார். சிறந்த தெய்வபக்தர்-ஆசாரசீலர் அன்பு கனியப்பேசுவார். அவர் ஜோதிடம் பார்த்தோ, கணித்தோ கொடுத்தால் உள்ளது உள்ளபடியே நடக்கும் என்று எங்கள்

மூதாதையர் கூறுவர். அவர் வழித்தோன்றலில் வந்த வைத்திலிங்கம் ஜோதிடர் பின்னல் பிரபலிக்கமாக விளங்கினர் அவர் வாழ்ந்த காலத்தில் திருவாளர் சிவஞான ஐயர் என்ற பிராமணர் ஒருவர் ஜோதிடத்தில் பெருங்கீர்த்தி வாய்ந்தவராக இருந்து வந்தார், சென்ற சிலகாலங்களுக்கு முன் மறைந்து விட்டார்.

இப்படியாக தங்கள் ஆராய்ச்சிகளின்இன்னின்ன காலத்தில் இன்னது நடக்கும் என்று எமக்கு முன்னறிவித்தலாகக் காட்டிவைக்கும் ஜோதிடப் பெரியார்களையும் நாம் போற்றாமல் இருக்கமுடியாது.

'அவனருளாலே அவன்தாள் வணங்கு வோ'மாக.

தீபமும் தீபவிளக்கமும்

தேவாலயங்களில் முக்கியமாய் சிவாலயங்களிற் பலவகைப்பட ஒன்று முதல் முறையே தீபார்த்திகள் பல வகைப் பேதங்களாகத் தேவர் களுக்கு ஆராதிப்பது முறை.

ஆராதனை காலத்தில் தேவர்கள் அனைவரும் ஈஸ்வர தரிசனத்தின் பொருட்டு வந்து அவ்வுருவமாக நின்று ஆராதனை தரிசித்து விடை கொண்டும் போவதாக ஆகமங்கள் கூறுகின்றன.

அவற்றுள் ஒன்றுமுதல் ஐந்தள வுள்ள தீபார்த்திகள் ஈசனுதி தேவர் கள் என்றும், திரிதீபம் தத்துவத் திரயம் என்றும், பஞ்சதீபம் பஞ்ச கலாசத்திகள் என்றும், சப்ததீபம் சப்தமாதர்கள் என்றும், நவதீபம் நவசத்திகள் என்றும், ஏகதீபம் சரஸ்வதி ஸ்வாகாதேவி என்றும், மற்றைய நிஷபாதி ரூபமுள்ளவை பல தேவர்கள் அவ்வுருக்கொண்டு வந்து தரிசிப்பவர் என்றும், ஷோடசங்க ளாகிய உபசாரங்கள் பஞ்சபூதாதி தேவதா தரிசனம் என்றும், ஸ்ரீகாரணத்தில் ஓர் பாகத்தில் கூறப் பட்டிருக்கின்றது.

இந்தத் தீபார்த்திகள் ரந்திராதார கவும் ஏகாதாரமாகவும் கொம்பு களை ஆதாரமாகவும் பெற்றதாம். இவை சர்வகிருத்திய நாசத்தின் பொருட்டும் சர்வலோக இதத்தின் பொருட்டும் செய்யப்படுவன, தீபாராதனைகளில் கபிலைப்பசுவின் நெய் உத்தமம். மற்றப்பசுக்கள் நெய் மத்திமம். ஆட்டின் நெய் அதமம் விருட்ச பீஜங்களின் நெய்கள் நீக்கத்தக்கவை:

முதலில் தீபாராதனை செய்யுமிடத்து நாகதீபம் முதலாகக் கும்பதீபம் இறுதியாகச் செய்ய வேண்டியது. பின்னும் பதினெறு கலை கொண்ட தீப மும் பகூஷத்தீபமும் வாரத்தீபமும் ருத்ர நிர்திஷ்டம் சப்தமாதரம் நிவிர்த்தியாதி கலாத்தீபம் சரஸ்வதி தீபம் முதலிய தீபார்த்திகளைச் செய்ய வேண்டியது.

தீபார்த்திகளை எடுத்துஈஸ்வரனுக்கு ஆராதனை செய்வதில் மூன்று முறை தீபபாத்திரத்தை எடுத்து ஆராதனை செய்தல் வேண்டும்.அதில் முதன்முறை லோகாட்சணார்த்தமும் இரண்டாம் முறை கிராமரக்ஷணார்த் தமும், மூன்றும் முறை பூதரட் ணார்த்தமுமாக முப்பிரதட்சண மாகப் பாதாதி மத்தகம் வரையில் எடுத்து மத்தகம் நெற்றி மார்பு திருவடிகள் முதலியவற்றைக் குறித் துப் பிரணவாகாரமாகக் காட்டல் வேண்டும்.

இத்தீபார்த்திகளின் முடிவில் கர்ப் பூரார்த்தி செய்யப்படும். இதுநீராஞ் சனம் என்று கூறப்படும். இதனால் தேவாராதனை செய்யின் சர்வகாரிய சித்திகள் உண்டாம். இதனைச்செய்யு மிடத்து நாலங்குலம் உயரம் சுவாலை எழும்பக்கர்ப்பூரம் ஏற்றின் உத் தமம். மூன்றங்குலம் மத்திமம். இரண்டங்குலம் அதமம். நீராஞ்சன பாத்திரமானது விருத்தமாய்ச் சூர்ய மண்டலாகாரமாயிருத்தல் வேண் டும். இடையில் அக்கினி தேவனு டைய இருப்பாகக் கர்ப்பூராதிகள் பதித்தல் வேண்டும்.

தமிழகத்திலிருந்து வெளிவரும்

எண்கணித புத்தகங்கள், பிரபல அறிஞர்களின் கதை,
கட்டுரைகள், மர்ம நாவல்கள், சித்திரக் கதைகள்,
சகலவிதமான சஞ்சிகைகளும் பெற்றுக்கொள்ள

யாழ் நகரில் ஒரே புத்தக நிலையம்

ராஜன் புத்தகசாலை

பொது நூல்நிலையங்களுக்கு விஷேச கழிவுகளுண்டு

விபரங்களுக்கு

ராஜன் புத்தகசாலை

J. M. C. பில்டிங்

12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

கிளை

ராஜன் புக் சென்ரர்
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சோதிட விலாச புத்தகசாலை

ஆம்பம் :
1930

தொலைபேசி :
8083

உலகின் சகல மக்களாலும் விரும்பி உபயோகிக்கப்படும்

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம்

இரகு தினக்குறிப்பு

தினக் கலண்டர், மாதக் கலண்டர்கள்

*

இரகுநாதையர் உரையுடன் கூடிய
விதானமாலை என்னும் சோதிட நூல்

*

சோதிட வினுவிடை, ஜாதக பாஸ்கரன்
மற்றும் சமய, சோதிட, வைத்திய நூல்களும்

மற்றும்

பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்

முதலியனவும் எங்களிடம் கிடைக்கும்

*

சோதிட விலாச புத்தகசாலை
46, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, சோதிடப்பிரகாச யந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்று, சோதிட பரிபாலினி ஆசிரியர் இ. வெங்கடேச ஐயர் அவர்களால் வெளியிடப்பெற்றது